நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## C.C. No. 219/2024

## P.W. 2 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி )**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | பத்மா |
| தந்தை பெயர் | : | வெங்கடாஜலம் |
| கிராமம் | : | கரட்டூர் (வனவாசி) |
| வட்டம் | : | மேட்டூர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | PW 2 |
| வயது | : | 38 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று* ***2025–ஆம் வருடம், ஜுன் மாதம், 25–ம்ஆம் தேதி*** *பதிவு செய்யப்பட்டது.*

**எதிரிகள் ஆஜர் அவர்களது வழக்கறிஞர் ஆஜர்.**

**மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 04.44PM)

1. அ.சா.1 சீரங்கம்மாள் எனது அத்தை என்றால் சரிதான். அ.சா.3 இந்திரா என்னுடைய அக்கா ஆவார். எங்கள் வீட்டுக்கும் ஸ்ரீரங்கமாள் வீட்டுக்கும் சுமார் 300 மீட்டர் இடைவெளி இருக்கும். நான் சத்தம் கேட்டு தான் சம்பவ இடத்துக்கு

சென்றேன் என்றால் சரிதான். பிரச்சனைக்கு பிறகு ஒரு கால் மணி நேரம் கழித்து சென்று இருப்பேன் என்றால் சரிதான். ஆஜர் எதிரி கவிதா சீரங்கமாளின் காட்டிற்கு கூலி வேலைக்கு ஏற்கனவே சென்று வந்திருந்தார் என்றால் சரிதான். அதன் பிறகு மன வருத்தம் ஏற்பட்டதால் கவிதா வேலைக்கு செல்வதில்லை என்றால் சரிதான்.

1. சம்பவத்தின் போது அ.சா.1 சீரங்கம்மாள் ஆஜர் எதிரிகளை சாப்பாட்டு தட்டை வீசி அடித்து விட்டார் என்றால் சரிதான். சத்தம் கேட்டு நான் போகும் போது முடி பிடித்து கீழே போட்டதை பார்த்தேன். கவிதாவின் அம்மா தான் சீரங்கமாளின் முடியை பிடித்து இழுத்து கீழே போட்டார். நான் காவல்துறை விசாரணையில் மேற்கண்டவாறு முடித்து சுற்றி கீழே எழுத்து போட்டதாக சொல்லி உள்ளேன். அ.சா.1 சீரங்கம்மாள் காவல் நிலையம் சென்று புகார் அளிக்கும் போது நான் அவருடன் செல்லவில்லை. சம்பவம் நடந்தே சீரங்கம்மாள் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து விட்டார்.

2. சீரங்கமாளை எனது அக்கா தான் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார். போலீசார் சம்பவத்துக்கு ஐந்து நாட்கள் கழித்து வந்து விசாரித்தார்கள். என்னை வீட்டுக்கு வந்து தான் விசாரித்தார்கள். எந்த போலீஸ் வந்து என்னை விசாரித்தார்கள் என்று எனக்கு பெயர் தெரியாது. அ.சா.1 சீரங்கம்மாள் எனது அத்தை என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:-04.54PM.

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/-நா.கோபாலகிருஷ்ணன்,**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**